*Eelakesari Educational Supplement*

விலை சதம் 3

ஓம்

# ஈழ கேசரி

(கல்வி அனுபந்தம்)

"கற்பவை கற்றுக் கற்றுங் கொழுக"

புத்தகம் 2 } சுன்னாகம்: வெகுதானிய௵ கார்த்திகை௴ ௫௳ (20-11-38) { இல. 6

## மத்தியான போசனம்

சென்ற சில காலமாக அரசினர் வறிய பிள்ளைகளுக்கு மத்தியான போசனம் அளித்து வருகின்றனர். வறிய பிள்ளைகள் யாவர்? செல்வர் யாவர்? என்பதை அறிவது கஷ்டம் என்று நினைத்து அரசினர் வறுமையுற்ற பகுதிகளிலுள்ள பள்ளிக்கூடங்களில் படிப்பவர்கள் யாவரும் வறியவர்கள் எனக்கருதி அப்பகுதிகளிலுள்ள பள்ளிக்கூடப்பிள்ளைகள் யாவருக்கும் பிள்ளையொன்றுக்கு நான்கு சதம் மத்தியான் போசனத்துக்காகக் கொடுத்து வருகின்றனர். மத்தியான போசனம் கிடைக்காத பிள்ளைகளுக்கு இது ஓர் பெரிய நன்மையாகும். மத்தியானப் போசனம் வீட்டிற் பெறக்கூடியவர்களுக்குத் தர்ம போசனத்தை உண்ணவேண்டிய சந்தர்ப்பமும் ஏற்படுகின்றது. தூரத்திலே வசிக்கும் பிள்ளைகள் வீட்டுக்குப் போய் வரும் கஷ்டத்துக்கஞ்சி தர்மச்சாப்பாடு சாப்பிட்டு அடிமைததனத்தில் ஆழ்ந்து விடுகின்றனர். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் செல்வப்பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள் சாப்பிடும் போது அவர்களிடம் பணம் பெறமுரிமை போசனங் கொடுக்கிற அதிகாரிகளுக்கிருக்க வேண்டும். இங்கிலாந்தில் இம்முறையே கையாளப்படுகின்றது. இயல்புள்ள பிள்ளைகளுக்கு இலவச போசனங் கொடுத்து அவர்களை இழிவான நிலைக்குக் கொண்டுவரக்கூடாது.

மத்தியான போசனத்தைப்பற்றி இன்னொரு விஷயம் ஈண்டு குறிப்பிடத்தக்கது. தற்போது பள்ளிக்கூட நாட்களில் மாத்திரம் போசனம் அளிக்கப்படுகிறது. பள்ளிக்கூட விடுதலை நாட்களில் பிள்ளைகள் என் செய்வது. வித்தியா பகுதியார் இவ்விஷயத்தை ஊன்றி ஆலோசிப்பார்களாக. உணவு எப்பொழுதும் வேண்டிய தொன்றாகும். ஆகையால் விடுமுறைகளிலும் வறிய பிள்ளைகளுக்கு மத்தியான போசனம் அளிக்க வேண்டியது அவசியமாகும் இங்கிலாந்து முதலிய நாடுகளில் விடுமுறை நாட்களிலும் மத்தியான போசனம் அளிக்கும் வழக்கம் கையாளப்பட்டு வருகின்றது.

### கல்விச் சட்டம்

கல்விச் சட்டம் இரண்டாம் முறை வாசிக்கப்பட்டு அரசாங்கசபை அங்கத்தவர்களது பூரண ஆதரவைப் பெற்றுள்ளது. அரசாங்கசபையில் பல கிறீஸ்த அங்கத்தவர்கள் இருந்தும் அவர்கள் அதை மறுக்கவில்லை. மறுப்பு மறுப்பு என்ற ஆரவாரம் கிறீஸ்த பொது ஜனங்களிடமிருந்து வருவதாகக்காணோம். எல்லாமறுப்பும் கிறீஸ்த குருமாரிடமிருந்தே கிளம்புகின்றது. இருபதாம் நூற்றாண்டிலும் கிறீஸ்த குருமார்கள் இவ்விதம் தாண்டவம் புரிவது ஆச்சரியமே.

கல்விச் சட்டம் ஒரு பெரிய உரிமையைச் சனங்களுக்குக் கொடுக்கின்றது. பெற்றாருடைய விருப்பமின்றிப் பிள்ளைகளுக்குச் சமயம் போதிக்கப்படாது, என்பதே அவ்வுரிமையாகும். பெற்றாருடைய விருப்பத்துக்கு மாறாகப் போதிக்க முன்வரும் பள்ளிக்கூட அதிகாரிகள் அரசினர் உதவி நன்கொடையை இழப்பார்கள். இவ்வுரிமை ஐம்பது வருடங்களுக்குமுன் இருந்திருப்பின் நமது நாடு சீர்குலையாது இருந்திருக்கும்.

### சர்வகலாசாலைக் கல்லூரி

கொழும்பிலுள்ள சர்வகலாசாலைக் கல்லூரிக்குச் செல்லும் மாணவர் தொகை வர வர அதிகரித்துக்கொண்டு வருகிறது. எல்லாப்பிள்ளைகளையும் சேர்த்தால் கல்லூரியில் இடம் போதாதென்று கல்லூரி அதிபர் அரசினருக்கு அறிவித்திருக்கிறார். இவ்விஷயத்தைப்பற்றி ஆலோசிப்பதற்கு உயர்தரக்கல்லூரித் தலைமையாசிரியர் கூட்டமொன்று விரைவிற் கூட்டப்பெறும். பின் வரும் விஷயங்கள் கவனிக்கத்தக்கன. உயர்தரக்கல்விக்காகப் பெருந்தொகைப் பணச்செலவோடு பல பிள்ளைகள் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்கின்றனர். இப்பிள்ளைகளுக்கு உயர்தரக் கல்வியைக் கற்பிக்க யாழ்ப்பாணத்தில் ஒழுங்கு செய்ய வேண்டும். இலங்கையின் ஏனைய பாகங்களிலும் உயர்தரக் கல்வியைக் கற்பிப்பதற்கு வேண்டிய ஒழுங்குகளை அரசினர் கையாள் முன் வர

(தொடர்ச்சி 48-ம் பக்கம் பார்க்க)

உல்லாச யாத்திரை—4.

# கொழும்புமாநகரின் குதூகலக் காட்சிகள்

[மூர்த்தி]

கொழும்பு நகரத்தைப்பற்றி என்ன கூறுவதெனப் புலப்படவில்லை. இலங்கையின் தலைநகரத்தைப் பற்றி ஒன்றுங்கூற முடியவில்லை என்று எண்ணிவிடாதீர்கள். பலவகைப்பட்ட இனிய பட்சணங்களால் நிரப்பப்பெற்ற ஓர் அறையில் ஒருவனைப் புகவிட்டு 'இவற்றில் ஒரு கவளம் உண்டுவிட்டுவா'' என விட்டால் அவன் மனம் என்ன நிலையையடையும். கொழும்பு நகர்க்காட்சிகளை இந் நிலையிலிருந்துதான் பார்க்க வேண்டியிருந்தது. அங்குள்ள வீதிகளை ஒரு நவீன முறையாகத்தான் காணப்பட்டன. வீதிகள் மிக விசாலமானவையாக இருக்கின்றன. வண்டிகள் போவதற்கு ஒரு புறம்; வருவதற்கு மறுபுறம். நடுவில் 'டிரும்' வண்டி செல்வதற்குரிய தண்டவாளம்; மேலே மின்சாரக் கம்பி. இரு ஓரங்களிலும் நடந்து செல்பவர்க்கெனக் கற்கள் பதிக்கப்பட்ட மேடைகள். அவ்வீதிகளில் நடமாடும் வண்டிவகைகளும், ஜனத்திரளும் கணக்கி லடங்குவனவன்று.

துருவப் பகுதிகளில் ஆறுமாசம் முழுவதும் பகலாக இருக்குமென்று பூமிசாஸ்திர பாடத்திற் படிக்கிறோம். இங்குள்ள வீதிகளிலோ இருளைக் காண்பதரிதாயிருக்கிறது. இங்கு பன்னிரண்டுமாசமும் பகலாகவேயிருக்கும் போலும். எண்ணிறந்த மின்சார விளக்குகளினால் இங்குள்ள வானளாவிய மண்டபங்கள் இராக்காலத்திலேயே மிகவும் சோபையுடன் விளங்குகின்றன. இங்குள்ள வியாபார ஸ்தலங்கள் ஒரு தனியழகு பெற்றுத் திகழ்கின்றன. பொருள்கள் அலங்கரித்து வைக்கப்பட்டிருக்கும் மாளிகைகளைப் பார்த்துக்கொண்டு நின்றாற் பசியே தோன்றாது. ஆனால் இவ்விடம் மிகவும் பயங்கரமானது. எங்கள் சட்டைப் பையிற் பணம் இருந்தால் அது எங்களுக்குத் தெரியாமலே மறைந்துவிடும் இப்படிச் சொன்னாற் பணத்தை யாராவது திருடிக்கொண்டு போய்விடுவார்களென்பது அர்த்தமல்ல. (இல்லை, இல்லை; அதுவும் நடைபெறுகிறதுதான். எங்கள் நண்பரொருவர் பத்து ரூபா நோட்டை மாற்றி ஆனந்த விகடனென்று வாங்கிக்கொண்டு சில்லறையைத் தமது சட்டைப் பையில் இட்டுக்கொண்டார். 'டிரும்' வண்டியில் உட்கார்ந்துகொண்டு பிரயாணச் சீட்டுப் பெறுவதற்காகப் பையிற் கையையிட்டார். பாவம்! சட்டைப்பை காலியாயிருக்கக் கண்டு திகைத்துப் போனார். அவரது பணம் பையுடன் கொள்ளையடிக்கப்பட்டுவிட்டது. அவர் கொழும்புக்குப் புதியவர்; ஆனதால் இதைப் பார்த்து மிக அதிசயப்பட்டார்.) அந்தப் பொருள்களைப் பார்த்த கண்கள் பணமுள்ளவரைத் திரும்பிச் செல்ல மனதிற்கு உத்தரவிடமாட்டா. இன்னுமொரு கஷ்டம்; இங்கு ஏதாவது பொருள்கள் பெறவேண்டுமாயின், ஆங்கிலத்தில் பேசுவது அவசியம். அதுமாத்திரமல்ல; ஐரோப்பிய உடையுமிருந்தால் இன்னும் விசேஷம்.

கொழும்புத்துறைமுகம் பார்வைக்கு வெகு அழகானது. கடலுட் கட்டப்பட்டிருக்கும் அணையின் உட்புறத்தில் பல கப்பல்கள் தங்கி நிற்கின்றன. துறைமுகத்திலிருந்து அநேக வள்ளங்கள் கப்பல்களை நோக்கிப் போய்க்கொண்டும், அங்கிருந்து திரும்பி வந்துகொண்டுமிருக்கின்றன. இவை நீரைப் பிளந்துகொண்டு செல்லுங்காட்சி மிக அழகாயிருக்கிறது. பற்பல நாட்டு மக்களையும் இவ்விடத்தில் நாம் பார்க்கலாம். நாம் துறைமுகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது ஒரு பெரிய ஊதுகுழற் சத்தங் கேட்டது. கப்பலின் புகைபோக்கிக் குளாய்கள் மூலம் புகை போவது தென்பட்டது. இது ஓர் ஜப்பானிய கப்பல்; சிங்கப்பூர் மூலமாக ஜப்பானுக்குச் செல்வது.

முகத்துவாரத்திற் கப்பல்களைச் செப்பஞ் செய்யும் இடம் அமைக்கப்பட்டிருக்கின்றது. கப்பல்கள் இங்கு வந்து சேர்ந்ததும் வாயில் அடைக்கப்பட்டு நீர் முழுவதும் வெளியேற்றப்படும். வேண்டிய திருத்தங்கள் செய்யப்பட்டபின் திரும்பவும் நீர் இறைக்கப்பட்டுக் கப்பல்கள் கடலுட்கொண்டு வரப்படும்.

இராணி வீதியில் இராணிமாளிகையும், கோடன் நந்தவனமும் இருக்கின்றன. இராணி மாளிகையிலல்ல, இந்த நந்தவனத்திற்றான் விக்ரோறியா ராணி வீற்றிருக்கின்றார். உண்மை விக்ரோறியா இராணியல்ல; அவருடைய சிலை. இராணி மாளிகையிற்றான் இலங்கைத் தேசாதிபதியும் அவரது குடும்பஸ்தரும் வசிக்கிறார்கள். யாராவது பிச்சைக்காரர் உட்புகுந்து விடுவார்களென்ற பயத்தினாற்போலும்வாயிலிலேயே காவலாளர்காவல்புரிந்துகொண்டு நிற்கின்றனர். இந்த வீதியின் எதிர்ப்புறத்தில் பெரிய தபாற்கந்தோரும், பாங்க் கட்டடங்களும் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றன. இராணுவ வீரர் வசிக்கும் ஸ்தலத்திலுள்ள விளையாட்டு நிலத்திற் சாயங்கால வேளைகளில் அவர்கள் விளையாடிக்கொண்டிருப்பதைப் பார்க்கலாம். இவர்களுக்குச் சாப்பிடுவதும் தேகப்பயிற்சி செய்வதுந்தான் நேரப்போக்கு. தங்களுடைய வீரசூரங்களைக் காட்டுவதற்கு யுத்தம் எப்போது வரும், வரும் என்று ஆவலுடன் எதிர்பார்ப்பவர்களைப்போற் காணப்படுகிறார்கள். இவர்கள் இடையிடையே வீதிகளில் அணிவகுத்துச் செல்வார்கள். யுத்தஞ் செய்யும் வீரம் எவ்வளவு இருக்கிறதென்று எப்படிச் சொல்லமுடியும்? அணிவகுத்துச் செல்லுங் காட்சி கண்களுக்கு அழகாகத்தான் இருக்கிறது.

மின்னல் இயற்கையில் உண்டாவது. நாம் விரும்பிய வேளையில் குறிக்கப்பட்ட காலங்களில் மின்னலை உண்டாக்குவது எப்படி? ஆனால் இராக்காலத்தில் இங்குள்ள தீபஸ்தம்பத்திலிருந்து செக்கனுக்கொரு முறை அழகிய மின்னல் உண்டாகிக்கொண்டு இருக்கிறது. இம்மின்னல்கள் வெளியான இடங்களிற் பதினைந்து மைல் தூரத்திற்குத் தெரிகிறதாம். (தொடரும்)

மோனந் தருஞ்ஞான மூட்டி எனக்குவட்டா, ஆனந்த வாழ்க்கை அருளாய் பராபரமே.

# பனையிற் படவாள் பார்த்த குயவன்

[வ. இராசரத்தினம் கல்முனை, மட்டக்களப்பு]

(முற்றொடர்)

இவனது ஊரிலிருந்து இரண்டு மைலுக்கப்பால் ஓர் காடுண்டு. இக்காடு குயவன் குடியிருக்கு மூருக்கும் அரசனது பட்டணத்திற்கும் இடையிலுள்ளது. குயவனும் ஊரைக்கடந்து காட்டிற்குள் பிரவேசித்தான். இவ்ன் செயலிவ்வாருக, அரசன் அன்றுகாலை, தன் சேவகர்களில் ஒருவனைக் கூப்பிட்டு 'நாம் வழக்கமாக எடுத்துவரும் குயவனிடம் போய் இன்றைக்கு நமக்கு வேண்டிய அளவு சட்டிபானைகளைப் பெற்று விரைவாக வா' என்று சொல்லி அனுப்பினான். இந்தச் சேவகன் அந்தக் குயவனிடம் அன்றுதான் முதன் முதலாகப் போகின்றான். அதற்கு முதலில் ஒருநாளும் போகவில்லை. சேவகனும் குயவனூருக்கு வந்து அவன் வீட்டை அவ்வூராரிடம் விசாரித்துக் கண்டுபிடித்து அவ்வீட்டினுள் நுழைந்து குயவனை அழைத்தான். அப்போது அங்கே குயவன் மனைவி வெளிவந்து "அவர் வெளியே போய் விட்டார்" என்று சொன்னாள். அப்படியாயின் அரசனுக்கு வேண்டிய சட்டிபானைகளை நீயாவது தரல்வேண்டும் என்றான் சேவகன். அதற்கவள், 'அவரில்லாமல் ஒன்றுந் தொடக்கூடாது. அவர் இருக்கிற நேரம் வந்து வேண்டுமளவு கொண்டுபோகலாம். நாளைக்கு ஒரு இடமும் போகமாட்டார்.....' என்று ஒரு நெடிய பிரசங்கம் பண்ணிவிட்டாள். சேவகனும் இவளது பேச்சை மெய்யென்று நம்பி, "தான்வந்து தேடிப்போவதாகவும், நாளை வரும்போது சந்திக்க வேண்டுமென்பதாகவும், அவனிடம் (குயவன்) சொல்லும்படி சொல்லிவிட்டுத் திரும்பிப் பட்டணத்திற்கு மீண்டான். பட்டணத்திற்கு வரும் வழியில் அக்காட்டிலுள்ள பனந்தோட்டமொன்றூற் போக நேர்ந்தது. குயவனும் அந்தக் காடெல்லாம் சுற்றித்திரிந்து கடைசியாக இப் பனந்தோட்டத்தினுள்ளேயே வந்து தங்கி இருந்தான். சற்றுத் தூரத்தால் அரசனது சேவகன் வருவதைக் கண்ட குயவன், தன்னைத்தான் தேடி வருகிறான் என மதித்துக்கொண்டு அங்கிங்கு ஓட வகையறியாது ஒவ்வொரு பனைமரமாகப் பார்த்து வருவதாகத் தலையை அந்தப்பக்கமும் இந்தப் பக்கமுமாகச் சாய்த்துச் சாய்த்துப் பாசாங்குபண்ணித் திரிந்தான். தூரத்தில் வருஞ் சேவகன், இவனது செய்கையைக் கண்டு அவனுக்குச் சமீபமாக நெருங்கி வந்தான். சேவகன், தான் தேடிக்கொண்டு போன குயவன் இவன்தானென்று கனவிலுங் கருதவில்லை. இன்னுனென்றுந் தெரியாது.

சேவகன் அருகில் வரக்கண்ட குயவன் மனம் நடுநடுங்கிற்று; கைகால்கள் விழுந்துபோவதுபோல் தோன்றிற்று. எப்படியிருந்தாலும் சற்றுத் தைரியமாக நின்று பனைகளைப் பார்த்துக்கொண்டே திரிகிறான். சமீபத்தில் வந்த சேவகன் இவனது செய்கையைக் கண்டு குறுஞ் சிரிப்புற்று, அவனைக் கூப்பிட்டு "டேய்! பனைமரத்தில் என்ன பார்க்கின்றாய்?" என்று கேட்டான். குயவனுக்கு எதைச் சொல்லுவோமென்று அந்த நேரத்தில் ஒன்றும் புலப்படவில்லை. நெஞ்சில் உலக்கை போடத் தொடங்கிற்று. தான் பேசுவது இன்னது என்று கூடக் குயவனுக்குத் தெரியவில்லை. சேவகன் கேட்ட கேள்விகளுக்கு மறுமொழியாக "ஐயா! ஒன்றுமில்லை; இங்குள்ள பனைமரங்களில் படவாள் வெட்டுதற்கு எந்த மரம் உதவும் என்றுதான் பார்க்கிறேன்" எனப் பகர்ந்தான். இதைக் கேட்டவுடனே சேவகன், கலகலவெனச் சிரித்து "அடே குயவா! பனைமரத்தில் என்னடா படவாள் வெட்டுகிறது......." என்று சொல்லி முடிப்பதற்கிடையில், 'யாரோ தான் இங்கு நிற்பதாகச் சொல்லி இருக்கிறார்கள்; சேவகனும் வந்து கண்டுகொண்டான்; இல்லாவிட்டால் நான் குயவன் என்பது எப்படித் தெரியும்' எனக் குயவன் தன் மனதினிலெண்ணி, "நானிங்கு நிற்கிறேனென்று யாரையா சொன்னது? யாரையா சொன்னது?" என்று நெஞ்சு படபடவென்றடிக்க மிகுந்த ஆத்திரத்தோடு கேட்டான். இவன் பேசிய பேச்சையும் நிற்கிற நிலைமையையுங் கண்ணுற்ற அரமனைச் சேவகன் தான் தேடிப்போன குயவன் இவன்தான் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லையெனத் தீர்ந்து, படவாள் வெட்டுகிற கருமத்தைக் கை நெகிழவிட்டு 'அரசனேவலால் மட்பாண்டங்களெடுக்க வந்த விபரத்தைச் சொன்னான். குயவன் தான் மோசம்போன நிலைமையை நினைந்து துக்கித்தானேனும், அதை வெளிக்காட்டாதவனாய் சேவகனோடு வேறு வார்த்தைகளைப் பேசி வீட்டுக்கழைத்துப்போய் வேண்டிய அளவு மட்கலங்களைக் கொடுத்தனுப்பினான். குயவனும் 'ஆத்திரகாரனுக்குப் புத்தி மட்டு' என்னும் ஆன்றோர் வாக்கியத்திற் கிலக்காகியதுமன்றி, அஸ்திபாரமில்லாது ஆகாயமளாவுப் வண்ணம் கட்டிய மனக்கோட்டையையும் இருக்க இடந்தெரியாமல் இடிபடக் கொடுத்து நின்றான்.

சேவகன், குயவன்வீட்டிற் பெற்ற பாண்டங்களை ஓட்டாடியு மரசன் வீட்டிற் சேர்த்தபின்பு தன் சிநேகிதர் முதலானோருக்கும் பிறர்க்கும் பனையிற் படவாள் பார்த்த குயவனின் கதையைச் சொல்லிச் சொல்லிச் சிரித்தான். இக் கதையைக் கேட்டுக்கொண்டிருந்தவர்களும் வயிறு குலுங்கக் குலுங்க நகைத்தார்கள். வேண்டுமானல் நீங்களும் இக்கதையை அபிநயத்துடன் நடித்துக்காட்டி உருண்டுருண்டு சிரித்துப்பாருங்கள்!

ஈழகேசரி கல்வி அனுபந்தம்
தனிப்பிரதி விலை சதம்—3
25 பிரதிகள் விலை சதம்—50
தபாற் செலவு வேறு
ஆண்டுச்சந்தா ரூபா 2.
முற்பணமின்றி அனுப்பப்படமாட்டாது

# கல்வி - 33

(தமிழாசிரியர், திரு. கா. இளையதம்பி அவர்கள்)

உடையைப் பற்றிச் சென்ற விதழிற் கூறியவற்றைத் தொடர்ந்து பின்னுஞ் சில கூறுதும். மனிதவறிவு வளருந் தன்மையதுவாதலின் அவ்வறிவினேற்றத்துக் கேற்ப வுடையுமேறியது. மரவுரியையும் மிருகவுரியையு மாடையாகக்கொண்ட மனிதன் அவ்வளவில் நின்றுவிடவில்லை. நாகரிகமுதிர்ச்சிக் கேற்பவும், சீதோஷ்ண விகற்பத்துக் கேற்பவும், அந்தஸ்துக் கேற்பவும் ஆடையைச் சம்பாதித்த மனிதன் அவற்றைத் தொழிற்படுத்து மிலகுவான வழியையுங் கற்றுக்கொண்டான். மிருகவுரியைவிட்டு அதன் மெல்லிய ரோமத்தை நூற்று ஆடையாக நெய்துகொண்டான். மரவுரியை விட்டுப் பஞ்செடுத்து நூற்று ஆடையாக்கினன். நாகரிகமுதிர்ச்சி நோக்கி யுடம்பை முற்றுயுடுத்திக்கொண்டவனிக்காலத்திலே யம்முதிர்ச்சிக்கு முற்றுப்புள்ளியிட்டு உடையைச் சுருக்கிக்கொண்டான். பகல்முழுவதும் தேகத்தைப் போர்த்துக்கொள்ள முடியாத நிலையில் வெய்யிலி னகோரத்தைத் தாங்கிச் சிவித்த மனித னிரவிலே கம்பலத்தாற் போர்த்துக்கொள்ளவேண்டிய சீதளவிறைப்பும் பூமுகத்திலுண்டன்றே! பகலுமிரவுமோரேமாதிரியான புழுக்கமுள்ள பூமுகப் பகுதிகளுமுண்டென்க. அப்பாகங்களிலுள்ளார் பருத்தி நூலாலானவுடையையே தரித்துக்கொள்வரென்க. எம்மவர் உடுப்பது நான்கு முழமாகக் கொண்ட காரணத்தையும் விசாரிக்க. நடுத்தரமான சீதள நாட்டிலுள்ளார் கம்பலவுடையைத் தேடியுடுப்பதையும் ஆராய்க. மயிர்ப்புறந் தேகத்தைப் பொருந்தவுடுக்கும் துருவப்புறவாசிகளையும் நோக்குக. தானுறங்குதற்கென்று கூடமைக்கும் பட்டுப்புழுக்களைக் கொன்று அக் கூட்டினின்றும் நூலெடுத்துப் பட்டாடை நெய்து அதன் மென்மையைப் புகழ்ந்துகொண்டாடித் தஞ்சீரும் செல்வமும் விளங்க வணிந்து கொள்வாரு முண்டே. இவ்வுடை சீதோஷ்ண பேதத்துக்கேற்றதென்க. எல்லார்க்கு மிஃதியலாதென்பது பற்றியே செய்கைப் பட்டுக்களுந் தோன்றின. இக்காலத்துச் செய்கைபட்டுக்களெவையென விசாரித்தறிக.

சக்கரவர்த்திகளும், இராசாக்களும், மந்திரிமாரும், பிரதானிகளும், தேசாதிபதிகளும், தாஞபதிகளும்; படைத்தலைவரும், படைவகுப்பினரும், உத்தியோகஸ்தரும், கல்வியாளரும், அதிகாரிகளும், குடியானவரும், கமத்தொழிலாளரும், வணிகரும், பிறதொழிலாளரும், பெண்களும், ஆண்களும் தம்மந்தஸ்துக் கேற்ப வுடையுடுத்லை நாம் பார்த்திருக்கின்றேமே. இவ்வுடைகள் அந்தஸ்து நோக்கி யழகிலும், விலையிலுமுயர்ந்துந் தாழ்ந்துமிருக்கும். இவை சிறப்பு நோக்கியவையென்க. எனினும் தம்மந்தஸ்துக்கேலாதவுடை யுடுப்பாரு மிக்காலத்திலே யெங்குங் காணப்படுகின்றனர். இஃதவர் அறியாமையிருந்தபடி யிப்படியெனக் காட்டும்.

பல்வகை வஸ்திரங்களு மெப்படி யாக்கப்பாட்டினை யடைகின்றன வெனப் பூகோள நூலைவாசித்தறிக. இயந்திரங்களா லவை தொழிற்படுத்தப்படுவதிப்படியென வந்நூல்கள் விளக்குகின்றன. இயந்திரங்கள் கண்டறிய வந்ததினலன்றே தொழில் கிடையாத் திண்டாட்டமேற்பட்டது. இயந்திர நெசவு திருத்தமும், மென்மையும், செலவுச்சுருக்கமும் வாய்ந்ததென்பர். பழங்காலத்திலே யாதாவது யந்திரங்கள் வருதற்குமுன் கைந்நெசவு மென்மையும் அழகும் வாய்ந்ததாயிருந்ததென்ப் பலவிடங்களிலும் வாசிக்கிறேம். இந்தியாவுக் கிக்காலமிடிமை வந்ததன் காரணங் கைந்நெசவு கைவிடப்பட்டதே. வேலைக்கெதியிலும், செலவுச்சுருக்கத்திலும் யந்திரத்தொழிலோடு கைநெசவு நிற்கமாட்டாமையால் வந்த குறையிதுவென்த்தெளிக. கைவேலை கைவிடப்பட்டதினலேதொழிலாளருங் கைப்பழக்கமற்றவரானர். மகாத்துமாவின் கைந்நெசவு விருத்தி தடைப்படாது நடக்குமேல் முற்காலத்திற் செய்யப்பட்டவை போன்ற வஸ்திரங்கள் தொழிற் படுத்தப்படுதலும், அவை மென்மையிலும் அழகிலும் வாய்த்தலும் மலிதலும் நாம் எதிர்பார்த்தற்குரியனவாகும்.

இக்காலக் கல்வியைத் தேசத்துக்கேற்ற முறையிற் கொண்டு வருதல் வேண்டுமென்பார் கைத்தொழில் விருத்திக்கேற்றன விவையிவையென்றெடுத்துச் சொல்லாது பலவற்றையும் பேசுகின்றார். நாட்டின் வறுமையைப் போக்குதற்குரியன வெவையென வாராய்தலும், அவற்றைக் கல்வியுளொன்றாகக் கொள்ளுதலும் வாயாவிடின் கல்வியாலாயபயனென்? கல்வியைத் திருத்தி யமைப்பதென்பத னர்த்தம்யாது? கலவியுடன் மாணக்கன் தன் சீவியத்தை முட்டின்றி நடாத்துதற் குரியதொரு தொழிலையுங் கல்லாவிடின் அக்கல்வியாற் பயன்பிறவாதென்கிறேம்.

புந்தியினல் நின்னடியைப் போற்றுகின்ற மெய்யடியார், சிந்தை யிறப்போநின் தியானம் பராபரமே.

# எலியின் கதை

அத்தியாயம் 6.

## இனத்தவரைக் காணல்

அந்தமிருகக் காட்சிச் சாலையில், ஓர் கூண்டிற்குட் சில எலிகளைக் கண்ணுற்றேன். அவைகள் மிகவுஞ் சிறியவைகள். கூரான தலைகளையும், மிகவுங் கட்டைவாலையும், அளவுக்கு மிஞ்சி நீண்ட கன்ன மீசையையுமுடையன வாகக் காணப்பட்டன. அவற்றின் மேற்றோல் கறுப்பாயிருந்தது. அடிவயிறு மஞ்சள் கலந்த வெண்மையாயிருந்தது. சைபீரியா, நோர்வே போன்ற குளிரான தேசங்களில் இத்தகைய எலிகள் மந்தை மந்தையாய் வசிக்கின்றன என்று பின்னர் அறியலானேன். நான் கூண்டிற் கண்ட எலிகள் லாப்லந்து தேசத்து எலிகள்.

இன்னொரு கூண்டில் இன்னொரு எலியைக் கண்டேன். அது ஜேர்மன் தேசத்தது. அதன் தலை தடித்ததாயும் மொட்டையாயுமிருந்தது. அதற்குப் பெருந் தொகையான கன்னமீசையுமிருந்தது. அதன் கண்கள் பெரிதாயிருந்தன. பெரிய வட்டவடிவமான காதுகளுமிருந்தன. அதன் முதுகும் தலையும் சிவந்த செங்கல் மங்கலான நிறமுடையனவாய் விளங்கின. அதன் மார்பின் இருபக்கங்களிலும் மூன்று நூதனமான புள்ளிகள் காணப்பட்டன.

இன்னொரு மூலையிலிருந்து ஒரு மணம் வீசியது. அங்கு திரும்பிப் பார்த்தேன். அங்கு கனடா தேசத்து எலியொன்று காணப்பட்டது. ஒரு சின்ன முயலளவு பருமன் உடையதாக அவ்வெலியிருந்தது. அது மிகவும் சாந்த குணமுடையதாயிருந்தது. அது என்னை அன்பாக வரவேற்றது. அது எனக்குப் பின்வருமாறு தன் வாழ்க்கையைப் பற்றிக் கூறியது. "நண்பனே! நான் கனடா தேசத்து வாவிக்கரையில் வசித்தேன். என் இனத்தவர்கள் பலர் அங்கேயுண்டு. எங்களுடைய அழகான வட்டவடிவமான இல்லங்களை நீ கண்டால் மிகவுஞ் சந்தோஷப்படுவாய். காய்ந்த புற்களாலும் வைக்கோலாலும் செய்யப்பட்டுக் களிமண்ணாற் பூசப்பட்டுள்ளதே அவ்வில்லங்கள். அவற்றைச் செய்து முடிப்பது எங்களுக்கு மிகவுங் கஷ்டந்தான். ஆனாற் கஷ்டமின்றியொரு காரியமுங் நடவாதல்லவா?" இப்படி அந்தக் கனடாதேசத்தெலி சொல்லிக் கொண்டிருக்கும்போது காவற்காரன் கதவைத் திறந்துகொண்டு வந்தான். நான் வைக்கோலுக்குள் ஒளித்துக்கொண்டேன். நன்றாக இருட்டின் பிறகே வீடு போவது என்று நான் முடிவு பண்ணிக்கொண்டேன்.

பின்பு விரைவாக ஆட்களும் வந்தார்கள். வெவ்வேறு வகுப்பினராய மனுஷசாதியாரைக் காண எனக்கு விருப்பாயிருந்தது. எலிகளுக்குள்ளிருக்கும் வகுப்புப் பேதம்போல மனுஷருள்ளும் இருக்கின்றது என்று நான் தெரிந்து கொண்டேன். அந்த மனிதர் எலித்தோலினாற் செய்யப்பட்ட தொப்பிகளை யணிந்திருந்தார்கள். அதைக் கண்டதும் என் இரத்தங் கொதித்தது. பிரான்சு தேசத்தில் அநேகம் எலிகள் கொலை செய்யப்படுகின்றன என்றும், அவற்றின் தோலிலிருந்து தொப்பிகள் செய்வதுமாத்திரமல்லாமல், அவ்வெலிகளின் மென்மையான தோலினால் கைக்குட்டையும் செய்யப்படுகிறதென்பதையறிந்தேன். மனிதன் தன் சுகத்துக்காக என் இனத்தவர்களைக் கொலை செய்கிறானே என்பதை யறிய யறிய நான் மிகவும் துக்கமடைந்தேன்.

(தொடரும்)


# தமிழ் மஞ்சரி

(முதலாம் பாகம்)

[வித்தியாசாலைகளின் உபயோகத்திற்குரிய தேனைப் பரீக்ஷா புத்தக சபையாரால் **3-3-36** ல் அங்கீகரிக்கப்பட்டது]

இந்நூல் செய்யுட்பாகம் வசனபாகமென இரு பகுதிகளாக வகுக்கப்பட்டிருக்கின்றது. செய்யுட் பாகத்தில் தேசாபிமானம் பாஷாபிமானம் இலக்கியச் சுவை சொல்விற்பத்தி நீதி என்னுமிவற்றை விளங்கக்கூடிய இனிமையான செய்யுள்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. வசனபாகத்தில் தெளிவான நடையில் இதற்காக எழுதப்பட்ட சிறந்த உரை நடைப்பாடங்கள் பதினைந்து சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்நூல் ஆறும் வகுப்புக்குரிய இலக்கிய பாடமாகப் பல பாடசாலைகளில் பாவித்து வருகிறார்கள்.

**விலை சதம் 50**

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.


### "ஈழகேசரி" இளைஞர் சங்கம்

பரிசுக்கதையும், பரிசு பெற்றவர்களின் பெயரும், பரிசு விபரமும் இம்முறை இடமின்மையால் பிரசுரிக்கப்படவில்லை. மறு முறை வெளிவரும் —தாத்தா

# நுணலுந் தன் வாயால்......

(தூரி)

**கா**ளிதாஸனைப் பற்றித்தெரியுமல்லவா? அவன் பெரிய வடமொழிக்கவி. அவனுடைய கவிகளில் சுவை நிரம்ப இருக்கும். திராக்ஷைப்பழத்தை உண்டு சுவைப்பதில் எள்ளளவும் கஷ்டமிராது. பழத்தை வாயில் போட்டுக் கொண்டதும் நாக்கினால் ஒரு நசிப்பு! அவ்வளவுதான்! பழத்தின் ரசம் சுவைக்கத் தொடங்கவிடும். தேங்காயை அவ்வளவு சுலபத்தில் உண்டு ரஸிக்க முடியாது. முதலில் தேங்காயை உரிக்க வேண்டும்; பின் அதை உடைக்க வேண்டும்; அப்புறம் தேங்காயைத் துருவவேண்டும்; பின் கொஞ்சம் எடுத்து வாயில் போட்டுக் கொண்டால் சற்று சுவைக்கும். பிரயாசைப்பட்டதற்குத்தக்க பலன் கிடைக்காது. இந்த விதமாகவே கவிகளும் உள்ளன. காளிதாஸனது கவிகள் சற்றும் சிரமப்படாமலே சுலபத்தில் சுவையைத் தரவல்லன. முதலில் கூறிய திராக்ஷக்கனியைப்போல, ஆனால் மற்றவர்களுடைய கவிகளைப்படித்து அர்த்தம் பண்ணி வியாக்கியானம் செய்தாலும் சுவை சொற்பம். தேங்காயைப் போலத்தான். திராக்ஷையைப்போல் தேங்காயில் இனிமை உண்டா?

இவ்வளவு சிறந்த காளிதாஸனைப் போஜன் கண்டு தன் ஆஸ்தான கவியாக்கியது நூதனமல்ல. போஜன் சிறந்த ரஸிகத்தன்மை உள்ளவன். அவனே சிறந்த கவிகள் செய்வதிலும் வல்லவன். இவன் தன் ஆஸ்தான கவிகள் எல்லாரிலும் பார்க்க காளிதாஸனிடம் விசேஷ மதிப்பு வைத்திருந்தான். ஒருவராலும் முடிக்க முடியாத சம்ஸ்யைகளை காளிதாஸன் திறம்பட முடிப்பதில் பேர் பெற்றவன். காளிதாஸன் முடிக்க இயலாதது மற்றெவராலும் இயலாது.

போஜனுக்கு ஒரு மனைவி சிறந்த கவி. புலிக்கு வாழ்க்கைப்பட்டது குரங்காகுமா? அவள் ஒருநாள் காளிதாஸனோடு ஏதோ சம்பாஷித்துக்கொண்டு நின்றாள். இதைக்கண்டு விட்டான் போஜன். ஆச்சரியப்பட்டான். தவறாக எண்ணங் கொண்டான். காளிதாஸன்மேல் அவனுக்கு ரொம்பக் கோபம் வந்தது. உடனே நோட்டீஸ் கொடுத்து விட்டான். காளிதாஸனும் நாட்டை விட்டு வெளியேறினான்.

காளிதாஸன் அவனுக்கென்ன. தூக்கேற்றுக் கொள்ளாத கொம்பு எங்காவது உண்டா? உலகம் போஜன் ஆட்சிக்குட்பட்டிருக்கவில்லை. அவன் உலகின் சிறு பகுதிக்குத்தான் அரசன். மீதி காளிதாஸனுக்குத்தான் சந்தேகமில்லை.

இந்தக் காளிதாஸன் என்ற கவி ஒரு பூங்கொம்பு போன்ற தாஸியிடம் சென்றான். அவள் அவனை ஏற்றுக் கொண்டாள். காளிதாஸன் தாஸி வீட்டில் சுகமாக விருக்கிறான். அவனுக்கு உலகில் ஒரு குறைவுமில்லை. குரங்குப்பிடி தெரியுமல்லவா? அந்த மாதிரி காளிதாஸ மகா கவியும் தாஸி வீட்டைவிட்டு நீங்கியபாடில்லை.

இங்கே போஜன், அவன் காளிதாஸனை நீக்கியதனால் ஏற்பட்ட நஷ்டத்தை உடனே உணர்ந்தான். ஆனாலும் அவனிடம் இன்னும் பல பிரபலஸ்த கவிகள் இருக்கும் போது என்ன குறைவு. ஆனால் ஒன்று. சந்திரனை இல்லாத வானம் நக்ஷத்திரங்கள் பல இருந்தாலுமே சோபிப்பதில்லை. சந்திரனுக்கு எத்தனை நக்ஷத்திரங்கள் சேர்ந்தாலும் நிகர் நிற்கமுடியுமா? காளிதாஸன் இல்லாதசபை பொலிவிழந்திருந்தது.

போஜனுக்கு நிரம்பின வருத்தம். வீணாக் காளிதாஸனில் சந்தேகங்கொண்டு நீக்கி விட்டோமே என்று காளிதாஸன் திரும்பி வருவதாயிருந்தால் கூட சந்தோஷமாக ஏற்கத் தயாராய் இருந்தான். போஜனுக்கு காளிதாஸன் எங்கே இருக்கிறான் என்றே தெரியவில்லை?

சில மாதங்கள் செல்ல போஜன் மிக வருத்தப்படலானான். காளிதாஸன் எங்கே இருந்தாலும் போய் அழைத்துவர விரும்பினான். அவனுக்கு காளிதாஸன் இல்லாதது பெரிய வருத்தமாய்ப் போய்விட்டது. போஜனால் அரைக்கணமும் காளிதாஸன் இல்லாமல் இருக்க முடியவில்லை. அவன் காளிதாஸனைக் கண்டுபிடிக்க ஒரு புதிய ஏற்பாடு செய்தான். ஒரு பலகையில் "பூவில் பூ இருக்கிறதென்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் காணவில்லை" என்று எழுதி அப்படியே குறையாகவிட்டான். அந்த அடிக்கு விடை போஜனுக்கே தெரியாது. அந்த வினாவிற்கு விடை சொல்லக்கூடியவன் இந்த உலகில் காளிதாஸன் ஒருவனே எனவே அவனைக்கண்டு பிடித்தற்கு இது சுலபமான வழி அல்லவா? சுலோகத்தை முடிப்பவர்கட்கு பாதி ராஜ்யம் அளிப்பதாக அதில் எழுதியிருந்தான்.

அந்தப்பலகை எல்லாரும் பார்க்கக்கூடிய பகிரங்க இடத்தில் வைக்கப்பட்டது.

வருவோர் போவோர் எல்லாரும் பலகையைப்பார்த்துக்கொண்டு யோசித்தனர். "பூவில் பூ இருப்பதாவது அசம்பாவிதம்" என்று கூறிக்கொண்டு சென்றனர். அச்சுலோகம் ஒருவராலும் பூர்த்திசெய்ய முடியவில்லை.

ஒருநாள் அந்தத்தாஸி அந்தப் பலகையைக் கண்டாள். அதை வாசித்தாள். சந்தோஷத்தால் கூத்தாடினாள். காளிதாஸன் இருக்கும்போது பாதிராச்சியமல்ல முழுராச்சியமே கிட்டாதா?

அன்றிரவு அவள் காளிதாஸன் சந்தோஷமாயிருக்கும் சமையம் பார்த்து "பூவில் பூ இருப்பதாக கேள்விப்பட்டிருக்கிறேன் பார்த்தது கிடையாது" என்றாள். உடனே காளிதாஸன் "பெண்ணே; உன் தாமரைபோன்ற முகத்தில் இதோ இரு நீலோற்பலங்கள் இருக்கின்றனவே" என்றான்.

தாஸிக்கு அன்றிரவு நித்திரையில்லை. எப்போது விடியும் என்று எண்ணியபடி விடையை மனனம் செய்து கொண்டிருந்தாள்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும் போஜனிடம் சென்றாள். "மகாராஜாவே தங்கள் வினாவிற்கு விடை எனக்குத் தெரியும்" என்றாள்.

தாயிருந்தும் பிள்ளை தளர்ந்தாற்போல் எவ்விடத்தும், நீயிருந்தும் நான்தளர்ந்து நின்றேன் பராபரமே.

# ஒரு பெரிய தேவதை

நவீன உலகில் ஒருபெரிய தேவதை தோன்றியிருக்கிறது. இந்தத் தேவதைக்குள்ள பலம் ஒருவர்க்குமில்லையென்று அஞ்சாது கூறலாம். இத்தேவதையை வைத்து பூசித்தால் கைமேற் பலன்கிட்டும். நினைத்தவையெல்லாம் சித்தியாகும். இதையறிந்துதான் ஜெர்மனி, யப்பான், இங்கிலாந்து, முதலிய தேசங்களில் இத்தேவதையை வைத்து வணங்குகிறார்கள். இத்தேவதைக்கு செலவழிக்கும் பணத்திற்கு எங்களூர்ப் பூங்கா வனங்களில் செலவாகும்பணம் எம்மட்டு? எங்கள் தேவதைகளுக்குக் கற்பூரட் புகைகாட்டி வீழ்ந்து வணங்கினாலும் நாம் நினைத்தவை சித்தியாகுமோ என்பது பூச்சியந்தான். ஆனால் இத்தேவதைக்குச் செலவழிப்பது வீண்போகாது. இந்த இரகசியத்தை ஜெர்மனி நன்றாக அறிந்திருக்கிறது. 'அம்மா! நீயே எனது ஆருயிர், நீயே எனது கண்மணி' என்று அன்புபாராட்டி வணங்குகிறார் ஹிட்லர் இத்தேவதையை. 'சீ! இரத்தவெறிபிடித்த பிசாசு, இச்சனியனை அகற்றவேண்டும்' என்று பகட்டாகச்சொல்லிவிட்டு உள்ளன்புடன் போற்றுகிறாராம் சேம்பர்லீன்.

1914 ம் ஆண்டு இத்தேவதைக்கு போதும் போதுமென்று சொல்லும்படி விருந்தளித்தனர். நாலைந்து வருஷம் சாப்பாட்டிற்கு குறைவேயில்லை. பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டு திரிந்தது இத்தேவதை. அப்போ இத்தேவதை மதலைப்பருவமாயிருந்தது. எதிலும் சிறந்த பயிற்சியில்லை. ஆனால் இப்போ இருக்கும் குணங்களின் சில அறிகுறிகள் அப்பவே சற்றுத் தெரிந்தது. தற்போது வாலிபவயதாகிவிட்டது, கெம்பீரம் கூடிவிட்டது. தனது கெட்டித்தனங்களைக் காட்ட வேண்டுமென்று அதற்கொருவிருப்பம். 'உனது கெட்டித்தனங்களைக் காட்ட அவகாசம் தருகிறேன்' என்று ஹிட்லர் சொல்லியிருக்கிறாராம். இத்தேவதையைப் பற்றிக் அதிகம் பிதற்றிவிட்டேன், ஏது என்று நினைக்கிறீர்கள்? யுத்ததேவதைதான். வேறுமொரு தேவதையிருக்கிறது. அதன் உயிர்நாடி ஆகச் சேம்பர்லீன் வாயிற்றான் இருக்கிறது. அதுதான் சமாதான தேவதை. வாயால் இந்தத்தேவதையை ஹிட்லர் கூடக் கசிந்துருகிப்பேசுகிறார். ஆனால் இதை வைத்துக் காப்பாற்றுபவர் ஒருவருமில்லை பட்டினி கிடந்து தயங்குகிறது இத்தேவதை இத்தேவதையைக் காப்பாற்றுபவர் இத்தேவதைபோல் மெலிந்த அந்தக்காந்திக் கிழவன்தான். யுத்ததேவதையை வணங்குகிறதில்லை என்பது அவர் பிடிவாதம்.

யுத்த தேவதைக்கு பெருவிருந்தளிப்பதற்கு ஹிட்லர் அடிகோலினார். 'செக்' மனிதரும் விருந்தளிப்பதற்கு உடன்பட்டனர். ஆனால் சேம்பர்லீன் யுத்ததேவதை கேட்ட வரமெல்லாம் கொடுத்துஅமுக்கி விட்டார். சேம்பர்லீன் என்ன 'பரதேசியைக் கொள்ளையடித்துப் பார்ப்பானுக்குக் கொடுத்த' பெருமையையே அடைந்தார். இதைக் குறித்து இங்கிலாந்து பூராக சேம்பர்லினைப் போற்றியதாம். எப்படியிருக்கிறது நாகரீக நம்பியரின் நீதி? சமாதானத்தை நிலைநிறுத்திய தீரன் என்று இவருக்கு நோபல், பரிசும் கொடுக்கவேண்டுமென்றும் சொன்னார்களாம். லண்டன் நகரம் தலைக்குமேல்விழாது காப்பாற்றியவர், 'செக்' கின் சுதந்தரத்தைத் திருகிப் பறித்துக் கொடுத்தவர், சர்வாதிகாரிகளின் கச்சனைக்கு இடங்கொடுத்தவர் என்று வயிறுநொந்து கூறலாமேயொழிய, வேறொன்றும் கூற இயலாது. யுத்த தேவதை கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கிறது. அதை அடக்கி வைத்திருக்கிறார்கள் வல்லரசுகள். வாலிப வயதல்லவா? பசி கூடித்தானேயிருக்கும். இத்தேவதை வெளிக்கிழம்பினால் முழு இராச்சியத்தையும் ஆட்டி அலைத்துத்தான் வைக்கும். வலிமையே உரிமை என்னும் வாக்கியந்தான் நிலைநிற்கும். சமாதான தேவதை உயிரை விடவேண்டியதுதான். சமாதான தேவதையைச் சித்திரவதை செய்துவிட்டார்கள். இப்போ கூறுபட்ட உடம்புதானிருக்கிறது. அதுவும் ஜெர்மன்குண்டின் சத்தம் கேட்டாலே சுக்கு நூறுதப்பறந்துவிடும்.

நாகரீக வெள்ளைத்துரைமார் இத்தப்பிணந்தின்னி யுத்ததேவதையை வைத்துக்கொண்டு எங்கள் தப்பிமுகத்தானைப் பகடிபண்ணுகிறார்கள். சிவனொருபிசாசாம் அதை வைத்துப் பூசிக்கிறோம் என்று பிதற்றுகிறார்கள். ஏன்! எங்கள் நாட்டுப் பாதிரிமார்கள் கூட இவ்விதந்தான் சொல்லுகிறார்கள். அஞ்ஞானிகள் மலிந்த இந்நாட்டை மெஞ்ஞானிகளாக்க வேண்டும் என்று இங்கு வந்த பாதிரிமார் தம் நாட்டின் மெஞ்ஞானத்தைச் சிந்திக்கிறதில்லைப் போலும்! யுத்தப்பிரீதி கொண்ட மேலநாட்டை அஞ்ஞான இருளினின்றும் நீக்கட்டும். பின்னர் கீழ்நாட்டின் மீது அவர்கள் கருணைபரிபாலிக்கட்டும்.

கிறிஸ்துமதக் குருமார்கள் கூத்தாடிக் கும்மியடித்து வரும் இந்நாளில் ஒரு ஆறுமுகநாவலர் தோன்றவில்லையே!

இ. பொன்னுத்துரை. இணுவில்.

---

போஜன், அங்கே கூறு பார்க்கலாம்; சன்மானம் உனக்குத்தான் என்றான்.

அவள், "பெண்ணே உன் தாமரைபோன்ற முகத்தில் இதோ இரு நீலோற்பலங்கள் இருக்கின்றனவே" என்றாள்.

போஜன், காளிதாஸனைக் கொன்று விட்டாயா? அல்லது அவன் உயிரோடுதான் இருக்கிறானா?" என்றான்.

அவள், 'ஏன்' என்றாள்.

"இது பாடியது அவன் தானே" என்றான் போஜன்.

'இல்லை நான்தான் பாடினேன் எனக்குத்தான் சன்மானம் உரியது' என்றாள் அவள்.

"நீ சன்மானம்பெறத் தகுதி உள்ளவளாயிருந்தால் ஆணாகிய என்னைப்பார்த்து 'பெண்ணே' என்று விழிப்பாயா? இது காளிதாஸனிடம் நீ கேட்டபோது அவன் உன்னைப்பார்த்துச் சொன்னதுதானே" என்றான்.

தாஸி முகம் சிவந்தது.

காளிதாஸனை போஜன் மறுபடி அழைத்து வந்தான்.

பிரிந்தவர் கூடினால்........................

---

வாயாற் கிணறுகெட்ட வாறேபோல வாய்பேசிப், பேயானோர்க் கின்பமுண்டோ பேசாய் பராபரமே.

## மத்தியான போசனம்

(40-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். தொழிற் கல்வி இல்லாமையால் எல்லாப் பிள்ளைகளும் உயர்தரக் கல்வி கற்க விரும்புகிறார்கள்.

ஒவ்வொரு மாகாணத்திலும் தொழிற் கல்வி கற்பிக்க வசதிகள் ஏற்படுத்தினால் பல பிள்ளைகள் தொழிற் கல்வி கற்கச் செல்வார்கள். பேராதனையிலிருக்கும் கமத்தொழிற் கல்லூரியை ஒரு உயர்தரக் கல்லூரியாக்குதல் அவசியமாகும். உயர்தரக் கல்வி விஷயத்தில் அரசினர் சோர்வாகவிருத்தல் நாட்டினுடைய முன்னேற்றத்தைத் தடைசெய்யும். படிக்க முன்வருவோருக்கு அவர்களுக்கியைந்த துறைகளிற் கல்வி புகட்டுதல் அரசினர் முக்கியகடமையாகும்.

### கல்விப் பிரயாணம்

புஸ்தகக் கல்வி பூர்த்தியடைவதற்குப் பிரயாணஞ் செய்தல் முக்கியமாகும். இவ்வுண்மையை மேனாட்டவர் நன்குணர்ந்திருக்கின்றனர். இவ்வருடத்தில் இங்கிலாந்திலிருந்து 15000 பிள்ளைகள் ஐரோப்பாவுக்குச் சென்றிருந்தனர். சமீபத்தில் ஒரு பெருந்தொகையான பிள்ளைகள் இந்தியாவுக்கும் அமரிக்காவுக்கும் செல்வார்களாம். பிள்ளைகளின் பிரயாண விஷயங்களைப்பற்றி ஒழுங்கு செய்வதற்குப் பிரயாணச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நமது நாட்டில் இவ்வித சங்கங்கள் ஏற்படாதிருப்பது பெருங்குறையே.

நமது நாட்டுப்பிள்ளைகளையும் இந்தியா, யப்பான், அமரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளுக்கு அனுப்பிப் பூரண கல்வியறிவுள்ளவர்களாகச் செய்யவேண்டியது பெற்றார் கடனாகும்.

### தற்காலக் கல்வி

டன்கன் கிறின்லீஸ் கூறுவது :-

உபாத்தியாயர்களுக்குள் ஏற்பட்டுள்ள உயர்வு தாழ்வுகளை நீக்கவேண்டும். இக்காலத்தில் நான்குவிதமான கல்வி கற்பிக்கப்படவேண்டும். அவையாவன :

(1) கைவேலை சம்பந்தமான கல்வி, (2) வியாபாரக் கல்வி, (3) க்ஷத்திரியக் கல்வி, (4) ஞானக்கல்வி. இக்காலத்திலுள்ள பிள்ளைகள் மாளிகைபோன்ற பள்ளிக்கூடங்களிற் படித்துவிட்டு வீட்டிலுள்ள பெற்றாரை "மூடர்கள்" என்று அழைக்கிறார்கள்.

E. W. அரியநாயகம் கூறுவது :-

நாங்கள் போத்துக்கேயருக் குட்பட்டிருந்த போது அவர்களுடைய பாஷையைப் படித்தோம். ஒல்லாந்தருக் குட்பட்டிருந்தபோது ஒல்லாந்த பாஷையைப் படித்தோம். நாம் இப்போது ஆங்கிலம் படிக்கிறோம். நாம் இத்தாலிய அல்லது ஜேர்மனிய பாஷைகளைப் படிக்கவேண்டிய காலம் வரும். அரசு நடத்தும் நாட்டவர்களுடைய பாஷையே படிப்பிக்கும் பாஷையாயிருக்கும். இது இவ்வாறாக ஆங்கில பாஷையை விட நமது தலைவர்கள் எத்தனையோ சாட்டிச் சொல்லுகிறார்கள்.

## சுகாதாரக் குறிப்புக்கள்

அநேகமான நோய்க்கிருமிகள் நமது உணவின் மூலமாகத் தேகத்தினுட் பிரவேசிக்கின்றன.

*  *  *

நோய்க்கிருமிகளை ஈ, கொசு முதலியன அசுத்தமான இடங்களிலிருந்து கொண்டுவந்து நமது உணவுகளிற் போட்டு விடுகின்றன.

*  *  *

நோய்க்கிருமிகள் சூரிய வெளிச்சத்தினால் அதிகம் பரவமாட்டா.

*  *  *

அடிக்கடி தேகத்துக்கு ஆறுதல் கொடுக்க வேண்டும். ஓயா தொடர்ச்சியான உழைப்பு சரீர நலத்தைக் கெடுத்து விடும்.

*  *  *

தேகாப்பியாசம் ஆரோக்கியத்துக்கு இன்றியமையாதது. நோயாளிகள் கடின அப்பியாசங்களைச் செய்யக் கூடாது.

*  *  *

புகையிலை தின்பவர்களும் புகையிலைச் சுருட்டுப் பிடிப்பவர்களும் நரம்புவலியிழந்து இரத்தங் கெட்டு மூளை மழுங்கி விரைவில் நோய்க்காளாகின்றனர்.

*  *  *

மனமகிழ்ச்சியுள்ள மனிதனால் நன்றாகச்சாப்பிடவும், நன்றாகத்தூங்கவும், நன்றாக வேலைசெய்யவும், வாழ்க்கையைச் சுவைக்கவும் முடியும்.

*  *  *

அசீரணம் போன்ற வயிற்றுக் குழப்பங்கள் எல்லாவற்றிற்கும் உபவாசம் ஓர் சிறந்த மருந்து.

*  *  *

ஆராய்ச்சி மூலமும், அநுபவத்தின் மூலமும் தாவர உணவே தேகசுகத்திற் கேற்றதென, பல அறிஞர்களாற் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

*  *  *

தேகத்தில் களைப்பு வரும்வரை தேகாப்பியாசஞ் செய்யக்கூடாது. களைப்பு வருவதற்குச் சிறிது முன்பாகவே நிறுத்தினால்தான் தேகாப்பியாசம் பயனைத்தரும்.

*  *  *

நமது உணவில் பால் ஒரு முக்கியமான அம்சமாக இருத்தல் வேண்டும்.

*  *  *

உணவருந்தும்போது தண்ணீர் பருகக்கூடாது. உணவருந்தியபின் எவ்வளவு தண்ணீரும் பருகலாம். உணவருந்தும்போது தண்ணீர் பருகினால் சீரண ரசம் கரைந்து விடும்.

(தொடரும்)

போ. கணபதிப்பிள்ளை,
சந்திர மௌலீச வித்தியாசாலைப் பழைய மாணவன்
மட்டுவில் வடக்கு

யாழ்ப்பாணம்—மயிலிட்டி தெற்கு "திருமகள்நிலைய" த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் 'தலையாட்டி' யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1938-ம் ௵ நவம்பர் ௴ 20௳ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது